# இலங்கை வரலாற்றில் மதக்கலவரங்களும் இன வன்முறைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் மும்மொழிவுகளும்

M.T.M. Rizvi

Eastern University Sri Lanka
abuagar73@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை பல இனங்கள், மதங்கள், மொழிகள், கலாசாரங்கள் கொண்ட பன்மைத்துவ நாடாகும். பன்மைத்துவம் என்பது பிரபஞ்ச ஒழுங்கில் மிகவும் இயல்பான ஒரு அம்சமுமாகும். இப்பன்மைத்துவங்களில் மத, இன, மொழி,கலாசரா பன்மைத்துவங்களை அடியாகக்கொண்டே இலங்கை வரலாற்று நெடுகிலும் மதக்கலவரங்களும் இன வன்முறைகளும் நிகழ்ந்து வந்துள்ளன. சமகாலத்தில் சமூகங்களிடையேயான பன்மைத்துவம் நாட்டின் அபிவிருத்திக்குரிய காரணியாக கொள்ளப்படுவதற்கு பகரமாக இந்த இயல்பான வேறுபாடுகள் பிளவுக்கும் பிரச்சினைக்குமான காரணியாகவும் சமூகங்களிடையேயான சக வாழ்வுக்கும் நாட்டின் அபிவிருத்திக்குமான தடைக்கற்களாகவும் மாற்றப்பட்டுவிட்டன. இதன் விளைவாக இலங்கை நாடு இவை தொடர்ரான மதக்கலவரங்களையும் இனப்பிரச்சினையையும் பல்துறைகளிலும் பல பரிமாணங்களிலும் எதிர் கொண்டு வருகின்றது. இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்று ரீதியாகவும் சமூக ரீதியாகவும் என பல்வேறு கோணங்களிலும் அதனது பாதிப்பின் பன்முகத்தன்மையுடனும் ஆராயப்பட்டுள்ள போதிலும். இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளை அடியாகக் கொண்டு ஆய்வுகள் அமையப் பெறவில்லை என்றே கருதமுடிகிறது. ஆதலால் இதற்கான ஆக்கபூர்வமான தீர்வினை முன்வைக்க வேண்டியது காலத்தின் தேவை என்ற வகையில் இலங்கையில் இடம் பெற்ற மதக்கலவரங்கள், இன வன்முறைகளை அடையாளப்படுத்தி, இலங்கையில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களினால் நாட்டுக்கு ஏற்படும் பல்துறை தழுவிய பாதிப்புகளையும் இத்தாக்குதல்களுக்கு பின்னணியான காரணிகளையும் கண்டறிந்து,மத கலவரங்களை தீர்ப்பதற்கான அல்லது குறைப்பதற்கான வழிகளை இஸ்லாத்தின் ஒளியில் ஆய்வு ரீதியாக இவ்ஆய்வு முன்வைத்துள்ளது.பொதுவாக காலனித்துவ காலப்பகுதி முதல் அண்மைக்காலம் வரையான மதக்கலவரங்களையும் அதற்கான பின்னணியினையும் அதற்கான காரணங்களுடன் ஆய்விற்கு உட்படுத்துவதுடன் அதனை தீர்ப்பதில் இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளை மையமாக கொண்டு ஆராய்வதனையும் இவ் ஆய்வில் வரையறுக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** பன்மைத்துவம், மதம், கலவரம், வன்முறை, பொறிமுறை, தீர்வு

## அறிமுகம்

இலங்கை பல இனங்கள், மதங்கள், மொழிகள், கலாசாரங்கள் கொண்ட சிறிய நாடாகும். இங்கு இனம், மதம், மொழி, கலாசாரம் என்பன வித்தியசமாக அமைவது இயல்பான விடயமாகும். இதனை நாட்டின் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்குமான காரணிகளாக பயன்படுத்துவது தேசத்தின் தார்மீக கடமையாகும்.

இந்நாடு பன்மைத்துவத்திற்கு எடுத்துக்காட்டான ஒரு சிறிய தேசமாகும். பன்மைத்துவம் என்பது பிரபஞ்ச ஒழுங்கில் மிகவும் இயல்பான ஒரு அம்சமாகும். இப்பன்மைத்துவங்களில் மத, இன, மொழி,கலாசரா பன்மைத்துவங்களை அடியாகக்கொண்டே இலங்கையின் வரலாற்று நெடுகிலும் மதக்கலவரங்களும் இன வன்முறைகளும் நிகழ்ந்து வந்துள்ளன.

சமகாலத்தில் சமூகங்களிடையேயான பன்மைத்துவம் நாட்டின் அபிவிருத்திக்குரிய காரணியாக கொள்ளப்படுவதற்கு பகரமாக இந்த இயல்பான வேறுபாடுகள் பிளவுக்கும் பிரச்சினைக்குமான காரணியாகவும் சமூகங்களிடையேயான சக வாழ்வுக்கும் நாட்டின் அபிவிருத்திக்குமான தடைக்கற்களாகவும் மாற்றப்பட்டுவிட்டன.

இதன் விளைவாக இலங்கை நாடு இவை தொடர்ரான மதக்கலவரங்களையும் இனப்பிரச்சினையையும் பல்துறைகளிலும் பலபரிமாணங்களில் எதிர் கொண்டு வருகின்றது.

இப்பிரச்சினைக்கான தீர்வுகளும் தீர்வுப்பொதிகளும் பல தரப்பினராலும் முன்வைக்கப் பட்டுள்ளன. ஆயினும் இன்றுவரை இப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

மாறாக இப்பிரச்சினை வித்தியாசமான வடிவங்களை பெற்றுவந்துள்ளது. ஆதலால் இதற்கான ஆக்கபூர்வமான தீர்வினை முன்வைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இதற்கான தீர்வினை மதப்பாரம்பரியங்களிலிருந்து பெறும் நோக்கில் **"இலங்கை வரலாற்றில் மதக்கலவரங்களும் இன வன்முறைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் மும்மொழிவுகளும்"** எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றினை சமர்பிக்கின்றேன். இந்நாட்டில் இத்தொடர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை பெறுவதற்காக இதயசுத்தியுடன் உழைக்கக்கூடிய அரசியல் தலைமைகளுக்கும் சமய தலைமைகளுக்கும் சமய பாரம்பர்யங்களிளிருந்து வழிகாட்டலை பெறுவதற்கு இவ்வாய்வு ஒரு ஆரம்ப கட்ட வழிகாட்டலாக அமையலாம் எனக்கருதுகிறேன்.

**ஆய்வின் நோக்கம்**

1. இலங்கையில் இடம் பெற்ற மதக்கலவரங்கள்,இன வன்முறைகளை அறிதல்.
2. இலங்கையில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களினால் நாட்டுக்கு ஏற்படும் பல்துறை தழுவிய பாதிப்புகளையும் இத்தாக்குதல்களுக்கு பின்னணியான காரணிகளையும் கண்டறிதல்.
3. மத கலவரங்களை தீர்ப்பதற்கான அல்லது குறைப்பதற்கான வழிகளை இஸ்லாத்தின் ஒளியில் ஆய்வு ரீதியாக கண்டறிதல்.

**ஆய்வுப் பிரச்சினை**

இனம், மதம், மொழி, கலாசாரம் போன்ற சமூகங்களிடையேயான இயல்பான வேறுபாடுகள் பிளவுக்கும் பிரச்சினைக்குமான காரணியாகவும் சமூகங்களிடையேயான சக வாழ்வுக்கும் நாட்டின் அபிவிருத்திக்குமான தடைக்கற்களாகவும் மாற்றப்பட்டுவிட்டன. இதில் குறிப்பாக மத பன்மைத்துவத்தை அடியாக கொண்டு ஏற்பட்ட வண்ணமுள்ள மத வன்முறைகளும் பிரச்சினைகளுமே ஆய்வின் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு வரையறை**

பொதுவாக காலனித்துவ காலப்பகுதி முதல் அண்மைக்காலம் வரையான மதக்கலவரங்களையும் அதற்கான பின்னணியினையும் அதற்கான காரணங்களுடன் ஆய்விற்கு உட்படுத்துவதுடன் அதனை தீர்ப்பதில் இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளை மையமாக கொண்டு ஆராய்வதனையும் ஆய்வுக்காக வரையறுக்கப்பட்டுள்ளது.

**இலக்கிய முன் ஆய்வுகள்**

இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்று ரீதியாகவும் சமூக ரீதியாகவும் என பல்வேறு கோணங்களிலும் அதனது பாதிப்பின் பன்முகத்தன்மையுடனும் ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் இப்பிரச்சினையில் தாக்கம் செலுத்தும் காரணிகள், அதைத் தீர்ப்பதில் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயங்களும் தரப்புகளும் போன்றன அரசியல் ரீதியாகவும் சமூகவியல் ரீதியாகவும் அலசப்பட்டுள்ளன. இனப்பிரச்சினையை **"இலங்கை**

**அரசியலில் மொழியும் மதமும்”** என்ற நூல் இலங்கையின் அரசியல் முரண்பாட்டிற்கான மூலங்கலளாக மொழியும் மதமும் அமைந்தன என்பதை வரலாற்று ரீதியாக அணுகுகின்றது. அதேபோன்று “**இனப்பிரச்சினை ஓர் இஸ்லாமிய கண்ணோட்டம்**” எனும் நூலைத்தவிர இனப்பிரச்சினைக்கான தீர்வு சமய கண்ணோட்டதில் முன்வைக்கப் படவில்லை என்றே கருதலாம். இது பொதுவான இஸ்லாமிய வழிகாட்டலை வழங்கிய போதிலும் கூட இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளை அடியாகக் கொண்டு அமையவில்லை. ஆதலால் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தலைப்பு இத்துறையில் ஆக்கபூர்வமான, புதிய அறிவியல் பங்களிப்பாக அமையும்.

**ஆய்வு முறைமை**

இவ்வாய்வானது இரண்டாம் நிலை மூலங்கலான நூல்கள், சஞ்சிகைகள், இணையதளங்கள் என்பவற்றின் மூலம் தகவல்களும் தரவுகளும் திரட்டப்பட்டுள்ளன. மேலும் பகுப்பாய்வு ரீதியான ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் முடிவுகளும் கலந்துரையாடல்களும்**

**இலங்கை ஓர் அறிமுகம்**

இலங்கையில் பௌத்தர்கள் 70.2, இந்துக்கள் 12.6, இஸ்லாமியர்கள் 9.7, கிறிஸ்தவர்கள் 7.4 என்ற வீதத்தில் நான்கு மதத்தவர்கள் வாழுகின்றனர். அதேவேளை சிங்களவர்கள் 82% இலங்கை தமிழர்கள் 4.3% இந்திய தமிழர்கள் 5.1% சோனகர்கள் 9.7% பறங்கியர்கள் 0.2% மலாய் முஸ்லிம்கள் 0.3% ஏனையோர் 0.2% என பல இனத்தவர்கள் வாழுகின்றனர். இவ்வாறாக பல மத, இன, மொழி, கலாசார, பின்னணிகளை கொண்ட மக்கள் வாழும் ஒரு நாடே இலங்கை. இங்கு காணப்படும் மதங்கள், மொழிகள், கலாசாரங்கள் அனைத்தும் இந்த நாட்டின் மகத்தான வளங்கள் ஆகும். உலகின் பிரதான நான்கு மதங்களை பிரதிநிதித்துவப்டுத்தும் மக்கள் வாழுகின்றனர். இந்நான்கு தரப்பாரும் தத்தமது மதம் சார்ந்த நாடுகளுடனான நல்லுறவுக்குப் பாலமாக அமைய முடியும். இந்த உறவின் மூலம் நாட்டின் சகல துறை அபிவிருத்திக்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கலாம்.

இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் பன்மைத்துவ சமூகத்தில் வாழுகின்றோம் என்பதனை புரிந்து அடுத்தவர்களது இன, மத, மொழி, கலாசாரம் சார்ந்த உணர்வுகளை மதித்து சகவாழ்வுக்கு அடித்தளம் இடுவது இன்றியமையாதது.

ஆயினும் இப்பன்மைதுவத்தை சரிவர அறிந்து புரிந்து நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பு செய்வதற்கு பதிலாக இயல்பான இவ் வித்தியாசங்களும் பன்மைத்துவமும் பிளவுக்கும் பிரிவினைக்குமான காரணியாக பயன் படுத்தி தேசிய ஒற்றுமையும், ஒருமைப்பாடும், அபிருத்தியும் சீர்குழைக்கப்பட்ட வண்ண முள்ளன.

**மத வன்முறைகளும் இனப்பிரச்சினையும்**

பன்மைத்துவ சமூகத்தில் வாழும்போது இங்கு காணப்படும் இயல்பான வித்தியாசங்களை விளங்கி, பரஸ்பரம் புரிந்துணர்வுடனும் விட்டுக்கொடுப்புடனும் சகவாழ்வு வாழ்வது மிகவும் இன்றியமையாதது. ஆயினும் இதற்கு மாறாக இந்த வேறுபாடுகளை அடியாக கொண்டு சமூகங்களிடையே நிரந்தரமான பிளவும் பிரிவினையும் தோற்றுவிக்கப் பட்டுள்ளதுடன் இந்த எதிர்மறையான மனப்பாங்கும் சிந்தனைப்போக்கும் இனப் பிரச்சி னைக்கும் மதக்கலவரங்களுக்கும் இட்டுச்சென்றுள்ளமைக்கு சான்றராக கலவரங்கள் அமைகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக பதிவான சில கலவரம் தொடர்பான பின்வரும் தரவுகள் அமைகின்றன.

| ஆண்டு | கலவரங்கள் |
|---|---|
| 1896 | சிலாபம் கலகம் (முஸ்லிம் கிறிஸ்தவர்) |
| 1900 | அநகாரிக தர்ம பால தோற்றுவித்த "சிங்கள மகா போதி சபை" முஸ்லிம்களுக்கு எதிராக கடுமையான பிரச்சாரங்களை ஆரம்பித்தமை |
| 1905 | 1905.05.02 யாழ் முஸ்லிம் கலவரம் |
| 1915 | கண்டிக் கலவரம் - அரசியல் ரீதியான முதலாவது மதக்கலவரம் |
| 1948 | பிரதமர் டி.எஸ். சேனநாயகா இலங்கை முஸ்லிம் சனத்தொகையை மட்டுப்படுத்த சிங்கள குடியேற்றங்களை முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதிகளில் அமுல்படுத்தியமை |
| 1972 | மடவலைக் கலவரம் |
| 1974 | மஹியங்கணை பங்கரகம்மான கலவரம் |
| 1976 | புத்தளம் பள்ளவாசலினுள் பொலிஸார் புகுந்து 7 முஸ்லிம்களை சுட்டுக் கொண்டமை. |
| 1980 | கோம்பனித்தெரு பள்ளிவாயலில் 1 முஸ்லிம் படுகொலை |
| 1982 | காலி துலவத்தை முஸ்லிம்கள் விரட்டியடிப்பு |
| 1985 | 1985.08.07 மன்னார் அளவக்க பள்ளி படுகொலை மற்றும் ஏறாவூர் தமிழ் முஸ்லிம் கலவரம் |
| 1989 | சம்மாந்துறை தமிழ் முஸ்லிம் கலவரம் மற்றும் அறுப்பளை பள்ளி கலவரம் |
| 1990 | 1990.07.12 குருக்கள் மடம் எனுமிடத்தில் ஹாஜிகள் 68 பேர் புலிகளால் படு கொலை மேலும் 1990.07.30 அக்கறைப்பறு 14 முஸ்லிம்கள் படு கொலை. 1990.08.01 சிகப்பு ஆகஸ்ட் ஆரம்பம் அன்று அக்கறைப்பறு 8 முஸ்லிம்கள் படுகொலை. 1990.08.03 காத்தான்குடி பள்ளிவாயல் படு கொலை,1990.08.05 அன்று அம்பாரை முல்லியன் காடு 17 முஸ்லிம் விவசாயிகள் படு கொலை 1990.08.06 அம்பாறை 33 முஸ்லிம் விவசாயிகள் 1990.08.12 சம்மாந்துறையில் 4 விவசாயிகள் மற்றும் அதே நாள் ஏறாவூர் எல்லைப்புர |

| | |
|---|---|
| | முஸ்லிம் கிராம படுகொலைகள்.1990.08.13 வவுனியாவில் 09 முஸ்லிம்கள் மற்றும் 1990.08.15 அம்பாரையில் அரந்தலாவ முஸ்லிம் கிராமத்தில் 09 முஸ்லிம்கள் புலிகளால் கொலை மேலும் வடக்கு முஸ்லிம்கள் புலிகளால் வெளியேற்றப்பட்டமை |
| 1992 | 1992.04.29 போலன்னறுவை அலிஞ்சுப் பொத்தானை 56 முஸ்லிம்கள் படுகொலை 1992.07.15 கிரான் குளத்தில் பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்டு புலிகளால் 22 முஸ்லிம்கள் கொலை 1992.10.15 பொலன்னறுவை பள்ளிய கொடள்ள 187 பேர் படு கொலை |
| 1994 | உகுரஸ்பிட்டி கலவரம் |
| 1997 | பேராதனை பள்ளி கலவரம் |
| 1998 | கண்டி லைன் பள்ளி பிரச்சினை மற்றும் கலகெதர மடிகே கலவரம் 1998.05.02 வெலிமட, 1998.05.08 திக்வெல்ல கலவரங்கள் |
| 1999 | 1999.02.14 நொச்சியாகம,பன்னல. மீயெல்ல கலவரம் மற்றும் பதுளை ஹிஜாப் பிரச்சினை (தமிழ்-முஸ்லிம்) |
| 2000 | 2000.07.17 பள்ளேகம, 2000.07.19 வெல்லம்பிட்டி கலவரங்கள், 2000.09.16 தலைவர் அஷ்ரப் விமான விபத்து, 2000.12.04 திஹாரி, 2000.12.15 கொப்பேய்கன கலவரங்கள் |
| 2001 | 2001.04.16 வடதெனிய, 2001.04.20 மாவனல்ல மற்றும் காலி கட்டுக் கொடை கலவரங்கள் |
| 2002 | 2002.07.31 கோடடார முல்லை, 2002.10.25 மாளிகாவத்தை, 2002.11.17 மதுரங்குளி கலவரங்கள் மற்றும் பேருவளை மோதல். |
| 2005 | 2005.12.05 மருதமுனை 2 முஸ்லிம் மீனவர்கள் கொலை |
| 2006 | 2006.8.04 மூதூர் முஸ்லிம்கள் புலிகளால் வெளியேற்றம் |
| 2009 | 2009.03.10 மாத்தறை அக்குரஸ்ஸ மீலாத் விழாவில் தற்கொலை குண்டுத்தாக்குதல் 14 பேர் பலி. |
| 2011 | அநுராதபுரம் ஓட்டுப்பள்ளம் ஸியாரம் பௌத்த மதகுருக்களால் தகர்ப்பு |
| 2012 | **பொதுபல சேனா** பௌத்த கடும் போக்கு அமைப்பு தோற்றம் மற்றும் மன்னார் முசலி முஸ்லிம் கிராம மீள்குடியேற்றப் பிரச்சினை 2012.04.20 தம்புள்ள நகர் ஹைரிய்யா பள்ளி வாயல் பௌத்த மதகுருக்களால் தாக்குதல்,2012.05.25 தெஹிவளை கல்விஹாரை வீதியிலுள்ள தாருர் ரஹ்மா பள்ளிவாசலை அவ்விடத்திலிருந்து அகற்றுமாறு கோரி பௌத்த மத குருமார்கள் தலைமையில் ஆர்ப்பாட்டம். 2012.05.28 குருனாகல் மாவட்ட ஆரிய வத்தையில் உள்ள குர்ஆன் மத்ரஸாவில் தொழுகை நடாத்துவதை நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டம். 2012.07.24 குருனாகல் மாவட்ட தெதுரு ஓயாகம யில் அரவு நேர தொழுகை நடாத்துவதை நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டம். 2012.07.26 கொழும்பு தெஹிவளை பீரிஸ் மாவத்தை தாருல் அக்ரம் குர்ஆன் மத்ரஸாவில் தொழுகை நடாத்துவதை நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டம் 2012.08.30 வெல்லம்பிட்டி கொகிலவத்தை |

| | |
|---|---|
| | பள்ளிவாசலினுள் நுளைந்த பௌத்த மத குருக்கள் அதனை தாக்கப் போவதாக எச்சரித்தமை.2012.10.27 அநுராதபுர மல்வத்து ஓயாலேன் பள்ளிவாசலுக்கு தீவைக்கப்பட்டமை.2012.12.08 கண்டி நகர முஸ்லிம் வியாபாரிகளுக்கு எதிராக சுவரொட்டிகள்.2012.12.24 மஹியங்கனை பள்ளிவாசலை மீள் புணரமைப்பு செய்ய வேண்டாம் என எச்சரித்து துண்டுப் பிரசுரங்கள். |
| 2013 | 2013.01.07 அநுராதபுர மல்வத்து ஓயாலேன் பகுதியில் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் முஸ்லிம்களை அங்கிருந்து வெளியேற்றுமாறு பௌத்த ஆர்ப்பாட்டம். 2103.01.19 கொழும்பு மஹரகம நகரில் முஸ்லிம் வர்தகர் ஒருவரது கடையை மூடுமாறு அச்சுருத்தல்.2013.01.20 அநுராதபுர புதிய நகரத்தில் முஸ்லிம் உணவகங்ளில் சாப்பிட வேண்டாம் என்றும், மலட்டுத்தன்மை தரும் மாத்திரைகளை அவர்கள் உணவுகளில் சேர்க்கிறார்கள் என்றும் பலி கூறி ஆர்ப்பாட்டம். 2013.01.23 பேருவளை உணவகம் தாக்கப்பட்டமை. 2013.01.24 குளியாப்பிட்டியில் முஸலிம்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் அதில் பன்றியின் உருவத்தில் அல்லாஹ் என வரைந்து பதாகைகள் கொண்டு செல்லப்பட்டமை.2013.02.01 கண்டியில் சித்திலெப்பை மாவத்தை என்ற வீதி பெயர்ப்பலகை மை பூசப்பட்டு வித்தியார்த்த மாவத்தை என மாற்றம் செய்யப்பட்டது. 2013.02.07 அன்று 2013 ஆம் ஆண்டை''ஹலால் ஒழிப்பு'' ஆண்டாக பொது பலசேனா அமைப்பு அறிவித்தமை. 2013.02.09 வரகா பொலையில் பௌத்த மத குருக்கள் முஸ்லிம்களுக்கெதிரதாக ஆர்ப்பாட்டம். 2013.02.11 ரம்புகனை பகுதியில் ஹலால் எதிர்ப்பு சுவரொட்டிகள். 2013.02.13 சியம்பலாகஸ்கொடுவ கிளின்பொலயில் முஸ்லிம்களின் கடைகள் உடைப்பு.2013.02.14 ஜாதிக ஹெல உருமயின் தலைவர் சம்பிக்க ரனவக்க ஹலால் அங்கிகாரம் ஒழிக்ப்பட வேண்டும் இல்லையேல் பௌத்த புரட்ச்சி வெடிக்கும் என எச்சரிக்கை விட்டமை. 2013.03.04 மஹர சிறைச்சாலை பள்ளவாயல் மீது தாக்குதல் 2013.03.11 பொது பல சேனா அமைப்பின் சூழ்ச்சியினால் ஹலால் உள் நாட்டுக்கு இல்லை வெளிநாட்டுக்கு மட்டுமே என இலங்கை ஜம்மியதுல் உலமா சபை அறிவித்தமை. |
| 2014 | 2014.06.16 அளுத்கமை இனவாத கலவரம் இது அன்றைய ஆட்சி கவிழ்வதற்கே காரணியாக அமைந்தது. |
| 2015 | 2015.02.22 பொலன்னறுவை நுகஹதமனை முஸ்லிம் கிராமம் ஒன்றின் குர்ஆன் மத்ரஸா உடைக்கப்பட்டமை. 2015.05.30 கொழும்பு பொரலை ஜாமியுல் அல்பார் மஸ்ஜித் தாக்கப்பட்டமை. 2015.07.07 அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட முஸ்லிம் பிர தேசத்திலுள்ள மணிக்கூட்டுக் கோபுர உச்சியில் பௌத்த தூபி ஸ்தாபிக்கப்ட்டமை. 2015.07.16 இப்பாகமுவ பக்மீகொல்ல ஜூம்மா பள்ளிக்கு தராவீஹ் தொழுகைக்காகச் சென்ற இளைஞர்கள் இனந்தெரியாதவர்களால் வெட்டப்பட்மை. |
| 2016 | 2016.01.07 வெல்லம்பிட்டி பொல்வத்தை மஸ்ஜித் நூர் இல் இஷா தொழுது விட்டு வந்த முஸ்லிம்கள் மீது''சிங்கலே'' என கோசமிட்டவாறு அவர்களைத் தாக்கியமை.2016.03.13 வத்தளை வெலிசர 20அடி பாதை வீதியில் நிர்மாணிக்கப்படவிருந்த பள்ளிவாயல் கட்டுமாணப்பணிகள் இடை நிறுத்தப்பட்டமை.201605.28 கொழும்பு-கண்டி பிரதான வீதி |

| | |
|---|---|
| | நெலுந்தெனிய பள்ளிவாசல் மீது குண்டுத்தாக்குதல்.2016.06.16 தலதா மாளிகைக்கு 200 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கண்டி லைன் பள்ளியின் மினாரா கோபுரம் அமைக்கும் பணிகள் தடை செய்யப்பட்டமை. 2016.07.01 அக்குரனை அளவத்துகொட பகுதியில் மல்கம் பந்தெனிய ஜும்ஆ பள்ளிவாயலுக்கு அருகில் முச்சக்கர வண்டியில் வந்த சில இனவாதிகள் பன்றியின் உடற்பாகங்களை வீசி விட்டு தப்பிச்சென்றமை.2016.07.16 ஹப்புகஸ்தலாவை அல் ஹாமிதிய்ய அரபுக்குல்லூரியன் மின்மானியும் தண்ணீர் கொள்கலனும் இனவாதிகளால் தீக்கிரையானமை. 2016.08.21 அக்கரைப்பற்று புட்டம்பை மஸ்ஜிதுல் ஜலாலிய்யா பள்ளிவாயல் தாக்கப்பட்டமை.2016.09.05 யாழ் பல்கலைககழக தொழுகையறை தாக்கப்பட்டமை.2016.09.17 கண்டி கல்ஹின்னை பள்ளிவாசல் மற்றும் வாகனங்கள் மீதும் தாக்குதல்.2016.09.22 அளுத்கமையில் முஸ்லிம் வர்த்தக நியைம் தீக்கிரை.2016.11.04 தெலியாகொன்ன பள்ளிவாயல் மீது தாக்குதல்.2016.11.06 நிகவெரட்டியப பள்ளி வாயல் மீது குண்டுத்தாக்குதல். 2016.11.15 தம்பலகாமம் முள்ளிப் பொத்தானை முஹைதீன் மஸ்ஜித் தாக்கப்ட்டமை. முஸ்லிம்கள் வாழும் பகுதியான மாளிகாவத்தை இரத்த ஆறாக ஓடும் என ஞானசார தேரர் எச்சரிப்பு.2016.11.19 இலங்கையின் பிரபல முஸ்லிம வர்த்தக நிறுவனங்களான NOLIMIT, FASHIONBUG, ETISALAT போன்ற நிறுவனங்களுக்கு எதிராக பேரணி நடாத்தப்பட்டதுடன் இனவாத துண்டுப்பிரசுரங்கள் வெளியானமை. அதன் ஒரு நிறுவானம் தீக்கரையாக்கப்பட்டமை. 2016.11.25 களுத்துறை மஹா ஹீனட்டியங்கல பள்ளிவாயல் மீது தாக்குதல். 2016.12.01 திருகோணமலை பனிச்சங்குளம் சின்னப்பள்ளிவாசலுக்குள் நூளைந்த சில இனவாதிகள் பல குர்ஆன் பிரதிகளை எரித்தமை.2016.12.06 முல்லைத்தீவு, முள்ளிப் பொத்தானை, பாணந்துறை போன்ற இட சில பாடசாலைகளில் சாதாரன தர பரீட்சைக்குத்தோற்றிய மாணவிகள் பர்தா அணிந்த நிலையில் எழுத தடுத்த நிகழ்வு. |
| 2017 | 2017.01.18 ஏறாவூர் தாமரைக்கேணி அக்ஸா சிறிய மஸ்ஜித் உடைப்பு,2017.01.21 கெலிஓய பிரதேச முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான காணியில் சிலை வைப்பு.2017.02.09 தம்புள்ளையில் முஸ்லிம் கடைகள் மூடப்பட வேண்டும் என்ற இனவாதிகளின் கோசமும் கடைகள் அடைக்கப்படமையும்,2017.03.30 முசலி பிரதேச முஸ்லிம்களின் வாழ்டங்களை உள்ளடக்கியதாக 01 இலட்சம் ஏக்கர் காணிகளை வன இலாக்காவுக்கு ஒதுக்கி வர்த்தமாணி வெளியிடப்பட்மை.2017.04.18 கொடப்பிட்டிய போர்வை நகரில் முஸ்லிம் கடைகள் சில பெற்றோல் குண்டுத்தாக்குதலுக்கு இலக்கானமை.2017.10.29 மட்டக்களப்பு கிரான் சந்தை வியாபாரத்துக்கு முஸ்லிம் வியாபாரிகளுக்கு தடை.2017.11.17 பௌத்த பிக்குகளின் காலி கிந்தோட்டை முஸ்லிம்கள் மீதான திட்டமிட்ட வன்முறை. |
| 2018 | 2018.02.23 அம்பாறை பள்ளிவாயல் மற்றும் கடைகள் இனவாதிகளால் தகர்ப்பு.2018.03.05 கண்டி திகண தெல்தெனிய முஸ்லிம்களின் வீடுகள் கடைகள் மீதான பௌத்த சில இனவாதிகளின் வெறித்தன தாக்குதல். |
| 2019 | 201904.21 ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்குப் பின்னரான இலங்கை முஸ்லிம்களின் கல்வி, பொருளாதாரம்,இருப்பு,பாதுகாப்பு, அரசியல் என அனைத்தும் பாரிய சவாலுக்குள்ளானமை. 2019.05.13 குருநாகல் மாவட்ட பல முஸ்லிம் கிராமங்கள் |

| | |
|---|---|
| | தாக்கப்பட்டமை. நீர்கொழும்பு, சிலாபம்,மினுவான்கொட பகுதிகளில் 457 முஸ்லிம் குடும்பங்கள் பாதிப்பு,147 வீடுகள்,132 கடைகள்,52 வாகனங்கள்,29 பள்ளிவாயல்கள் சேதம் ஒருவர் கொல்லப்பட்டமை. தொடர்ந்தும் நாட்டின் எல்லா இடங்களிலும் முஸ்லிம்கள் பல்வேறு சமய, சமூக, அரசியல்,பன்பாடு ரீதியான அசௌகரியங்களுக்கு உற்பட்டுக்கொண்டே இருக்கின்றனர். |

இலங்கையில் தொடராக இன,மதக்கலவரங்களும் சமூக, அரசியல், பொருளாதார முரண் பாடுகளும் இந்த நாட்டிலுள்ள முஸ்லிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்மையை முன்வைக்கப்பட்ட தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

அதேவேளை வழிபாட்டுத்தளங்கள், வழிபாட்டில் ஈடுபட்டவர்கள், மதப் பெரியார்கள் போன்றன தாக்கப்படுள்ளதையும் அவற்றின் சொத்துக்கள் களவாடப்பட்டுள்ளதையும் அச் சுருத்தலுக்குள்ளானதனையும் பொதுவாக மேலுள்ள தரவுகளின் விபரங்கள் குறிப் பிடுவதனை அவதானிக்கலாம்.

இந்த தாக்குதல்கள் அனைத்துமே தற்செயலாக, எவ்வித பின்னணியோ காரணங்களோ இன்றி நடைபெற்றுள்ளன என்ற முடிவுக்கு வரமுடியாதுள்ளது மாறாக சில தாக்குதல்கள் ஏதேட்சையாகவும் தனிப்பட்ட காரணங்களுக்காகவும் நடைபெற்றுள்ளன என எடுத்துக்கொண்டாலும் நாடளாவிய ரீதியில் நடந்துள்ள பதிவான இவையனைத்துமே எவ்வித பின்னணியுமின்றி நடந்தவை என்ற முடிவுக்கு வருவது ஆய்வு ரீதியாக நோக்கும் போது எவ்விதத்திலும் பொருத்தமற்ற முடிவு என்பதனையே இந்த தரவுகள் நிரூபித்துகொண்டிருக்கின்றன. அதேவேளை இவை திட்டமிட்ட அடிப்படையில் வரையறுக் கப்பட்ட சில குறுகிய நலன்களை அடைந்து கொள்வதற்காக நடந்தேறியுள்ளன என்பது புலப்படுகின்றது.

இந்த தாக்குதல்கள் இந்த நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் சாதகமான விளைவுகளை ஒருபோதும் கொண்டுவராது. இதற்கு மாறாக முற்றிலும் பல்துறை தழுவிய பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். தொடர்ந்து இவற்றின் பாதகமான விளைவுகளை ஆராய்வோம்.

**பிரச்சினையின் பாதக விளைவுகள்**

1) **உளவியல் ரீதியாக** நோக்கும்போது அனைத்து சமூகங்களிடையேயான மனிதாபிமான உணர்வுகள், மனிதநேயம், சகோதரத்துவம் போன்ற நல்லம்சங்கள் பாதிக்கப்படுவதுடன் குறிப்பாக சிறுபான்மையினர் மன அழுத்தத்துடனும் பீதியுடனும் வாழும் ஆரோக்கியமற்ற நிலையை தோற்றுவித்துள்ளது.

2) **அரசியல் ரீதியாக** நோக்கும்போது இலங்கையில் முஸ்லிம்களின் வழிபாட்டு தளங்கள் தாக்கப்பட்டுள்ளதால் ஜனநாயக் ரீதியில் ஒவ்வொரு குடிமகனும் அனுபவிக்க வேண்டிய அடிப்படை உரிமையான மதச்சுதந்திரம் பாதிக்கபடுகின்றது. இவை சர்வதேச நாடு களிடையே இலங்கையின் நன்மதிப்பையும் கீர்த்தியையும் பாதிக்கின்றது. அத்துடன் சர்வதேச ரீதியான அரசியல், ராஜதந்திர ரீதியான உறவை கடுமையாக பாதிக்கிறது.

3) **பொருளாதாதார ரீதியாக** பார்க்கும்போது நாட்டின் சமூக, அரசியல் ஸ்திரத்தன்மை, சமூக நல்லிணக்கம் என்பவற்றை பாதிக்கும். தேசிய அபிவிருத்திக்கு பொருத்தமான சூழலை உருவாக்குவதில் இவை இரண்டும் மிக முக்கியமாகும். மதக்கலவரங்களும் இனமோதல்களும் அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற நிலையினையும், சமூகங்கள்களிடையே பிளவையும் பிணக்கையும் தோற்றுவிக்கும். உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கை, உற்பத்தி திறன், விநியோகம், ஏற்றுமதி இறக்குமதி, அந்நிய செலாவணி, சுற்றுலா துறை போன்ற பொருளாதாரத்துடன் தொடர்புபட்ட பிரதான விடயங்களை முற்றாக பாதிக்கின்றது.

4) **சமூக ரீதியாக** அவதானிக்கும் போது ஒவ்வொரு சமூகத்தவரும் குறிப்பாக சிறுபான்மையினர் தமது மார்க்க உரிமைகள், உயிர்கள், உடமைகள் என்பவற்றுக்கு பாது காப்பில்லாத நிலையை உணரும் சூழல் தோன்றியுள்ளது.

மேலே குறிப்பிட்ட அனைத்து தாக்குதல்களும் திட்டமிட்டோ திட்டமிடப்படாமலோ மத வழி பாட்டுத்தளங்களின் மீதும் முஸ்லிம்களின் சொத்துக்கள் மீதும், மேற்கொள்ளப் பட்டுள்ளன.இவைகள் சமூகங்களிடையே அடுத்த சமயத்தவர்கள் குறித்த தப்பபிப்பிராயம், சந்தேகம், குரோதம், பகைமை போன்ற எதிர்மறையான பதிவுகளை ஏற்படுத்தும். மேலும் சமூகங்களிடையே விரிசலும் பிளவைவும் உருவாவதற்கு வழிவகுக்கும்.இவ்வாறன சமயங்களிடையேயான ஆரோக்கியமற்ற நிலை தேசிய சர்வதேச தீய சக்திகள் தமது சுய நலன்களை அடைந்துகொள்வதற்குரிய சூழலை உருவாக்கி கொடுக்கின்றது.

5) மத வழிபாட்டுதலங்கள், மத கலாசார முதுசங்கள், பாரம்பரிய பொது சொத்துக்கள் அழிக்கப்படுவதன் மூலம் நாட்டினதும் நாட்டில் வாழும் சமூகங்களினதும் வரலாறு அழிக்கப்படுகின்றது.

**மேலே குறிப்பிடப்பட்ட பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ள மதக்கலவரங்களுக்கும் இன மோதல்களுக்கும் மூலமாக இருந்துவரும் முக்கிய காரணங்களை அவதானிக்கலாம். அவை பின்வருமாறு:**

**1) வரலாற்று ரீதியான காரணிகள்**

காலனித்துவாதிகள் தங்களது ஆளுகைக்குட்பட்ட நாடுகளை ஆளுவதற்கான தந்திரோபாயமாக மதத்தையும் இனத்தையும் பயன்படுத்தியமையின் பாதிப்பு தொடர்கின்றது. சமகாலத்திலும் ஆதிக்க சக்திகள் மதவாதத்தையும் மதவெறியையும் மதக்கலவரங்களையும் பயன்படுத்தி தமது ஆதிக்கத்தை செலுத்துவதற்கும் நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கும் முனைவதை அவதானிக்கலாம். இலங்கையில் தொடராக நடைபெற்றுவரும் மதக்கலவரங்களும் இனமோதல்களும் பின்புலமாக சர்வதேச தேசிய ஆதிக்க சக்திகள் செயற்படுகின்றன என்பதற்கு சமகால நிகழ்வுகள் சான்று பகர்கின்றன.

**2) அரசியல் ரீதியான காரணங்கள்**

ஆளும் வர்க்கத்தினர் தங்களது நலன்களை அடைந்துகொள்வதற்காகவும் வாக்கு வங்கிகளை தக்கவைத்துகொள்வதற்காகவும் மதத்தை கருவியாக பயன்படுத்துகின்றனர்.

அத்துடன் தங்களது நலன்களுக்கு சவால்கள் எழும் போதெல்லாம் மதவாதத்தை ஆயுதமாக பயன்படுத்தி எதிர்கொள்கின்றனர்.இவ்வாறாக மதவாத, இனவாத சிந்தனையினை இலங்கை அரசியல் களத்தில் தோன்றிய சில அரசியல் கட்சிகளின் அனைத்து விதமான செயற்பாட்டிலும் அவதானிக்கலாம். இதனையும் தெளிவாக சமகால தேசிய அரசியல் களத்தில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

**3) சமூக ரீதியான காரணங்கள்**

சமூக ரீதியான பரஸ்பர புரிந்துணர்வின்மையும் நாட்டிலுள்ள கல்வி, பொருளாதாரம், தொழில்வாய்ப்புகள் போன்ற துறைகளிலுள்ள போட்டியும் பொறாமையும் மதக்கலவரங்களுக்கும் இனமோதல்களுக்கும் காரணமாய் அமைகின்றன. மேலும் இங்கு வாழும் பெரும்பாலானவர்கள் தனித்துவம் என்ற பெயரில் வாழ்வின் அனைத்து தளங்களிலும் தமது சமயத்தவர்களுடன் மாத்திரமே சேர்ந்து வாழ விழைகின்றனர். இந்த சிந்தனையின் விளைவாக அரசியலில் மதத்தையும் இனத்தையும் பிரதிபலிக்கும் கட்சிகளும்,கல்வித்துறையில் பாடசாலைகளும் என்று தோற்றம் பெற்றுள்ளதை அவதானிக்கலாம். இதனால் ஒரு சமயத்தவருக்கு பிற சமயத்தவர்களை பற்றி அவர்களுடன் உயிரோட்டமான நல்லுறவை பேணுவதற்கு வழி வகுக்ககூடிய அளவு மானசீகமான புரிந்துணர்வு ஏற்படாது. மாறாக ஒருவரைப் பற்றி அடுத்த சமூகத்தவருக்கு அந்நிய தன்மையும் சந்தேகப்பார்வையும் பயமும் ஏற்படுவது தவிர்கமுடியாதது. இவ்வாறாக ஒதுங்கி வாழுவதும் இப்பிரச்சினைக்கான மற்றொரு காரணமாகும்.

**4) சமய ரீதியான காரணங்கள்**

அடுத்த சமூகத்தவரது மத உரிமைகளை அங்கீகரிக்கும் மனப்பாங்கின்மையும் காழ்புணர்வும், தனது மதத்தின் மீதான வெறியும் இனக்கலவரங்கள் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களாக அமைகின்ற அதே வேளை மத சகிப்புத்தன்மையும் பிறரது சமய உணர்வுகளை மதித்து நடக்காமையும் இதற்குரிய காரணங்களாக இருப்பதுடன் மதங்களின் எழுச்சி வீழ்ச்சிகளும், பின்னடைவுகளும் மத மாற்றங்களும் இப் பிரச்சினைக்கான காரணமாக அமைகின்றன. அது மாத்திரமன்றி பிற சமயங்களைப் பற்றியும் தமது சமயத்தை பற்றியுமுள்ள அறியாமையும் தப்பபிப்பிராயமும் கூட இப் பிரச்சினைக்குரிய காரணிகளாக இருக்கின்றன.

**இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளை அடியாக கொண்டு மதப் பிரச்சினையை அணுகுவதற்கான பிரதான அடிப்படைகள்**

இஸ்லாம் மனிதனது சுபீட்சத்தையும் நலன்களையும் இலக்காக கொண்டே அனைத்து சட்டங்களையும் வகுத்துள்ளது. இதன் ஒவ்வொரு சட்டமும் மனிதனது நலன்களை தோற்றுவித்தல், நிலைநாட்டுதல், அவற்றுக்கு ஏற்படும் தீங்குகளிலிருந்தும் அத்து மீறல்களிளிருந்தும் பாதுகாத்தல் என்பவற்றை இலக்காக கொண்டது.

இஸ்லாத்தின் இலக்குகள் என்பது மனித நலன்களை தோற்றுவிப்பதற்காக சட்டங்களை வகுக்கும் போது இஸ்லாமிய ஷரீஆ கவனத்தில் கொண்ட அடிப்படைகள் ஆகும்.

மனித நலன்கள் பிரதான ஆறு விடயங்களை மையமாக கொண்டவை. அவை சமயம், ஆன்மா, புத்தி, மானம், சொத்து (வளங்கள்),பரம்பரை ஆகியவைகளாகும்.

இந்த ஆறு விடயங்களுடன் தொடர்புபட்ட ஏதாவது ஒரு விடயம் பாதிக்கப்படும் போது மனிதனின் முழு வாழ்வும் பாதிக்கப்படுகின்றது. வாழ்க்கை ஒழுங்கு சீர்குலைந்து போகின்றது. மனித நலன்கள் சீர் கெட்டுவிடுகின்றன. ஒழுங்கீனம் தலைவிரித்தாடுகின்றது. மனித குலத்தின் இருப்பு அழிவுக்கும் வீழ்ச்சிக்கும் உட்படுகின்றது. இவ்வனைத்து தீங்குகளிலிருந்தும் இங்கு குறிப்பிட்ட மனிதனின் ஆறு பிரதான விடயங்களையும் பாதுகாக்கும் நோக்கிலேயே அனைத்து சட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

**இந்த அடிப்படையிலிருந்து நாம் எதிர்கொள்ளும் மத வன்முறைகளை தீர்ப்பதற்கான அடிப்படையான வழிகளை ஆராய்வோம்.**

**நாட்டில் அனைவருக்கும் சமயங்கள், மொழிகள் பற்றிய அறிவூட்டல்**

அனைத்து பிரச்சினைகளுக்குமான மூல காரணியாக அமைவது அறிவின்மையே என்பது வெளிப்படையான யதார்த்தம், ஆதலால் அறிவைத் தேடுவதை இஸ்லாம் கட்டாய கடமையாக ஆக்கியுள்ளது. ஒவ்வொரு பிரஜையும் தனது சமயத்தை நன்கு அறிந்து கடைப்பிடிக்கும் அதேவேளை பிற சமயங்களை பற்றியும் போதிய அளவு அறிந்திருத்தல். இலங்கை போன்ற பன்மைத்துவ சமூகத்தில் தன்னையும் தான் வாழும் சமூக சூழலையும் கற்றறிந்து, பிறரது சமய உணர்வுகளையும் விளங்கி மதித்து நடப்பது பரஸ்பர புரிந்துணர்வுடனும் மத சகிப்பு தன்மையுடனும் வாழ்வதற்கு வழி வகுக்கும்.

பிற மதங்கள், மொழிகள், கலாசாரங்கள், பழக்கவழக்கங்கள், மரபுகள் போன்றன பற்றி போதிய அறிவை பெற்றிருத்தல் அவற்றுடன் நல்லுறவு பேணவும் சகவாழ்வு வாழவும் நாகரீகமாகவும் பண்பாடாகவும் நடந்துகொள்ளவும் அடித்தளமாக அமையும்.

இவை பற்றிய அறியாமையே இவற்றை மதித்து நடக்காது அவமதிப்பதற்கும் இழிவுபடுத்துவதற்கும் அநாகரிகமான முறையில் நடந்து கொள்வதற்கும் காரணமாக இருக்கின்றது. அத்துடன் இதுவே மதம், மொழி, இனம் போன்றவற்றின் மீதான வெறிக்கும் தீவிரவாதத்திற்கும் கடும்போக்கிற்கும் இட்டுச்செல்கின்றது. மேலும் தான் சாராதவற்றை அங்கீகரிக்காத குறுகிய மனோபான்மையையும் இறுக்கமான போக்கையும் தோற்று விக்கிறது.

ஜனநாயக அரசியல் ஒழுங்கில் மதச்சுதந்திரம், கொள்கைச் சுதந்திரம் என்பது அடிப்படையான விடயங்களில் ஒன்று. உலகமயமாக்கல் யுகத்தில் இலங்கை போன்ற ஒரு ஜனநாயக நாட்டிற்கு இத்தகைய நிலை சர்வதேச மட்டத்தில் அவப்பெயரையும் அபகீர்த்தியையும் ஏற்படுத்தும். அதுமாத்திரமன்றி சர்வதேச சமூகத்திற்கு முன்னால் நாட்டினது நன்மதிப்பினையும் நம்பிக்கையையும் இழக்க செய்யும். பரஸ்பர புரிந்துணர்வும் சகவாழ்வும் சாத்தியமாக நாம் வாழும் சமூக சூழலிலுள்ள மொழிகள் பற்றிய போதிய அறிவு பெறுவது இன்றியமையாதது.இதுவே சமூகங்களிடையிலான முக்கிய இணைப்புப்பாலமாக திகழ்கின்றது.

பிற மதங்கள், மொழிகள் பற்றி கற்பதுடன் பிற கலாசாரங்கள், பழக்கவழக்கங்கள், மரபுகள், வழக்காறுகள் என்பற்றையும் அறிந்து வாழ்வது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் ஐக்கியத்திற்கும் வழிவகுப்பதுடன் சமய நல்லிணக்கத்திற்கும் சகவாழ்விற்கும் காரணமாக திகழும்.

**மத உரிமைகளை அறிந்து மதித்து நடத்தலும் பேணிப் பாதுகாத்தலும்**

மத உரிமைகள் என்பது மனிதனின் அடிப்படை உரிமைகளாக இஸ்லாம் நோக்குகின்றது. ஆதலால் ஒவ்வொரு குடிமகனதும் மதச் சுதந்திரத்தையும் மத உரிமைகளையும் சம்பூரணமாக அங்கீகரிக்க வேண்டும். இதற்கு மாறாக இவ்வடிப்படையான உரிமைகளுக்கு இடையுறாகவும் முட்டுகட்டையாகவும் இருந்தால் அல்லது மதச்சுதந்திரத்திலும் கொள்கைச்சுதந்திரத்திலும் அத்துமீறி தலையிட்டால் அது தவிர்க்க முடியாத மத உரிமைப்போராட்டங்களினை நோக்கி பாதிக்கப்பட்டவர்களை இழுத்துச்செல்லுவது தவிர்க்க முடியாதது. அத்தகைய ஆரோக்கியமற்ற நிலையை தவிர்த்து ஒவ்வொரு குடிமகனுக்கும் சுதந்திரமாக சமய விவகாரங்களில் தீர்மானங்களை எடுப்பதற்கும் செயற்படுவதற்குமுரிய பூரண சுதந்திரமும் உரிமையும் வழங்கப்பட வேண்டும் என இஸ்லாம் வழிகாட்டுகின்றது. ஆகவே மதத்திணிப்பை முற்றாக தவிர்ந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்துகின்றது.

மேலும் மனித சமூகத்தில் பன்மைத்துவத்தை அங்கீகரித்து வாழ வேண்டும். இப்பன்மைத்துவங்களுள் மிக முக்கியமான ஒன்றுதான் சமய பன்மைத்துவம் ஆகும். இத் தன்மையை இல்லாதொழிக்க முடியாது. இந்த யதார்த்தத்தை புரிந்து அங்கீகரித்து அனுசரித்து வாழ வேண்டியது இன்றியமையாதது. சமய பன்மைத்துவ சமூகத்திலே அனைத்து சமயத்தவரிடையையும் சமயங்களிடையே உள்ள உடன்பாடான விடயங் களிலும் பொதுவான அம்சங்களிலும் ஆரோக்கியமான சுமகமான கலந்துரையாடல்களும் கருத்துப்பரிமாற்றங்களும் மேற்கொள்ளப்படுவது இன்றியமையாதது. இது நாட்டு மக்களிடையே ஆரோக்கியமான சகவாழ்விற்கும் நல்லிணக்கத்திற்கும் வழிவகுக்கும்.

ஒவ்வொருவரும் தான் சார்ந்துள்ள சமயத்தின் மீது பற்று கொள்வதில் எவ்வித தவறும் கிடையாது. அதனை பின்பற்றி வாழுவதிலோ அதற்காக அர்ப்பணத்துடன் உழைப்பதிலோ குற்றம் கிடையாது. இதற்கு மாறாக பிறரது மதஉரிமையிலும் மதச்சுதந்திரத்திலும் தலையிடுவதும் ஏனைய சமயங்களுக்கு எதிராக செயற்படுவதுமே மதவெறியாகும். இந்த மதவெறி முற்றாக சமூகத்திலிருந்து துடைத்தெறியப்படுவதன் மூலமே சகலரும் தத்தமது மத உரிமைகளை பூரணமாக பெற்று ஐக்கியமாகவும் ஒற்றுமையாகவும் வாழலாம்.

பிற மதத்தவரது மத உணர்வுகள், புனிதமாக கருதும் வணக்கஸ்தலங்கள், மதஅறிஞர்கள், கிரியைகள், வணக்க வழிபாடுகள் என்பனவற்றை பரஸ்பரம் மதித்து நடக்கக்கூடிய, மத உணர்வுகளையோ மதத்தையோ இழிவுபடுத்துவதை முற்றாக தவிர்ந்து வாழக்கூடிய ஆரோக்கியமான சூழல் உருவாகுவதுடன் ஒரு மதத்தை சார்ந்தவர்கள் பிற மதத்தை சார்ந்தவர்கள் மீது அத்துமீறுவதிலிருந்தும் சிந்தனை அடிமைத்துவத்திலிருந்தும் பூரணமாக சுதந்திரமடைந்து மத உரிமைகள் அனைத்தையும் பெற்று வாழக்கூடிய நாகரீகமான சூழல் ஏற்படும். இதுவே நாட்டின் நிரந்தர சமாதனத்தித்கும் சகவாழ்வுக்கும் அபிவிருத்திக்கும் வழிவகுக்கும்.

**ஆய்வு முடிவுகளும் மும்மொழிவுகளும்**

ஆய்வாளர் **“இலங்கை வரலாற்றில் மதக்கலவரங்களும் இன வன்முறைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் மும்மொழிவுகளும்”**என்ற தனது இவ்வாய்வின் ஊடாக பெற்ற முடிவுகள் பின்வருமாறு:

1) மனித சமூகத்தில் பன்மைத்துவம் என்பது தவிர்க்க முடியாதது.அதில் மத பன்மைத்துவம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.
2) மத உரிமை ஒவ்வொரு மனிதனதும் அடிப்படை உரிமையாகும்.இதனை பாதுகாப்பது அரசினதும் அதிகார பீடங்களதும் தலையாய கடமையாகும்.
3) இலங்கையின் வரலாற்று நெடுகிலும் மதக்கலவரங்கள் நடைபெற்று வந்துள்ளன.
4) ஆளும் வர்கத்தினர் தமது அரசியல் நலன்களை அடைந்துகொள்வதற்கும் தமக்கெதிரான சவால்களை எதிர்கொள்வதற்குமான கருவியாக மதத்தையும் மொழியையுமே பயன்படுத்தி வந்துள்ளனர். அதுமாத்திரமன்றி திட்டமிட்டு தேசிய சக்திகளும் சர்வதேச சக்திகளும் மதவாதத்தையும் இனவாதத்தையும் தமது இலக்குகளை அடைந்துகொள்வதற்காக இன்று வரை பயன்படுத்திய வண்ண முள்ளன.
5) மதம், இனம், மொழி போன்றவற்றினால் தோற்றுவிக்கப்படும் மதக் கலவரங் களையும் இனக்கலவரங்களையும் மனித குலத்திற்கு கிடைத்துள்ள சமய பாரம் பர்யங்களிளிருந்து தீர்க்கலாம்.
6) சமூகத்தில் காணப்படும் பொதுவான அறிவின்மையும் குறிப்பாக தான் சார்ந்ததும் பிறறதும் மதங்கள், மொழிகள் பற்றிய போதிய அறிவின்மையுமே மதக் கலவரங்களுக்கும் இனமோதல்களுக்கும் பிரதான காரணமாக இருக்கின்றது.
7) பிறரது சமய உரிமைகளை பூரணமாக அங்கீகரித்து அவற்றை மதித்து சமய நல்லிணக்கத்துடனும் மத சகிப்புத்தன்மையுடனும் வாழுவதன் மூலம் மட்டுமே நாட்டின் தேசிய ஒற்றுமைக்கும் ஐக்கியத்திற்கும் அபிவுருத்திக்குமான ஆரோக்கியமான சூழலை கட்டியெழுப்புவது சாத்தியமாகும்.
8) நாட்டினதும் நாட்டு மக்களதும் பொதுவான நலனுக்காக அனைத்து சமூகங்களும் இணைந்து கூட்டு பங்களிப்பை வழங்கலாம். அத்துடன் கருத்து வேறுபாடான விடயங்களில் ஒருவருக்கொருவர் அனுசரித்து, பரஸ்பரம் விட்டுக்கொடுத்து சகிப்புத்தன்மையுடன் வாழக்கூடிய சாதகமான சூழல் உருவாகும்.

**மும்மொழிவுகள்**

1) இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் கல்வி நிறுவனங்களிலும் குறிப்பாக இலங்கையிலுள்ள மதங்களையும் மொழிகளையும் பற்றி தேவையான அளவு அறிவை வழங்க அரசும், சமய தலைமைகளும் சமூக தலைமைகளும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவதுடன் பாடதிட்டத்திலும் சேர்ப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நாட்டிலுள்ள சமயங்கள் பற்றிய அறியாமையை ஒழிக்கலாம். அத்துடன் இவை பற்றிய சாதகமான புரிதலை ஏற்படுத்தலாம். இது அரசினால் முன்னெடுக்கப்படுமாயின்

உத்தியோகபபூர்வமானதாக அமைவதுடன் நாட்டு மக்கள் அனைவரையும் சென்றடையகூடியதாகவும் இருக்கும்.

2) நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் சகல சமயத்தவரையும் ஒன்றினைத்து குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை அனைத்து சமயங்களையும் சார்ந்த பொதுவான நிகழ்ச்சிகளை நடாத்த வேண்டும். அத்துடன் பொதுவான நாட்டு நலன் சார்ந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கக்கூடியதும் பொதுவான சமூகப் பிரச்சினைகளை தீர்க்கக்கூடியதுமான ஒன்றியங்களை சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக உருவாக்கி செயல்படுத்துதல் வேண்டும்.
3) அனைத்து சமயத்தளங்களையும் பரஸ்பரம் தரிசித்து அவற்றின் செயற்பாடுகளை விளங்குவதற்கான ஏற்பாடுகளை தொடராகவும் முறையாகவும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறாக முயற்சிகள் ஒரு சமயத்தவரை பற்றி அடுத்த சமயத் தவர்களிடையே சந்தேகக்கண்கொண்டு நோக்கும் நிலையும் தப்பபிப்பிராயமும் இல்லாமற்போவதற்கு காரணமாக அமையும். சமயங்களின் மேல் மட்டத் தவர்களிடையே ஆரோக்கியமான நல்லுறவிற்கும் பரஸ்பர புரிந்துணர்விற்கும் வழிவகுக்கும்.
4) சகல ஊடகங்களும் சகவாழ்வையும் மதநல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பும் விதமாக தங்களது சகல நிகழ்சிகளையும் வடிவமைத்து நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் ஐக்கியத்திற்கும் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும். சமயங்களை பற்றிய தவறான புரிதலுக்கும் பிழையான கருத்துக்களை விதைப்பதற்கும் காரணமாய் அமையும் நிகழ்ச்சிகளை முற்றாக தடை செய்து நாட்டினதும் நாட்டு மக்களதும் சமய ஒருமைப்பாட்டிற்கு வழி வகுக்கவேண்டும்.
5) பொது அரசியலிலும் சமூக வாழ்விலும் மதவாதத்தை பயன்படுத்துவதை முற்றாக தடுப்பதற்கும் தகுந்த சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் அரசும் நீதித்துறையும் பாதுகாப்புத் தரப்பு ஆகிய அனைவரும் ஆவண செய்ய வேண்டும். அத்துடன் அரசியல் துறையிலும் சமூக வாழ்விலும் சமய நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் சீர்குலைக்கக்கூடிய மதத் தீவிரவாதம், இனவாதம் ஆகியவற்றை பரப்பக்கூடிய தீவிர சிந்தனைப்போக்குகளை சட்டரீதியாக தடுக்கப்பட வேண்டும்.
6) நாட்டிலுள்ள சகல சமய வழிபாட்டுத்தளங்களும் தம்மைச் சார்ந்தவர்களுக்கு மதசகிப்புத்தன்மை, நல்லிணக்கம், இன நல்லுறவு என்பவற்றை ஏற்படுத்துவதற்காக பிற சமயத்தவர்களுடன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளை தொடராக போதிப்பதற்கும் பயிற்சிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
7) சமய வழிபாட்டுத்தளங்களுக்கும் வழிபாடுகளில் ஈடுபடுவோருக்குமான பாதுகாப்பினை பாதுகாப்புத்துறையினர் உத்தரவாதப்படுத்த வேண்டும். அதே வேளை அவற்றிற்கு ஊறுவிழைவிப்போருக்கெதிராக கடுமையான சட்ட நட வடிக்கையும் தண்டனையும் வழங்க வேண்டும்.
8) சக வாழ்வையும் சகல சமயத்தவரிடையேயும் நல்லிணக்கத்தையும் பிரதிபலிக்கும் வகையிலும் கட்டியெழுப்பும் வகையிலும் கலை நிகழ்ச்சிகளையும் போட்டி நிகழ்ச்சிகளையும் தேசிய, உள்ளூர் மட்டங்களில் நடாத்துதல் வேண்டும்.

9) நாடளாவிய ரீதியில் மதம், மொழி போன்ற பன்மைத்துவத்தை அடியாகக் கொண்டு நடைபெறும் கலவரங்களையும் மோதல்களையும் பற்றி பக்கச் சார்பின்றி ஆழமாக கள ஆய்வுகளை மேற்கொண்டு ஆக்கபூர்வமானதும் அறிவுபூர்வமானதுமான தீர்வுகளை பலகோணங்களிலும் முன்வைக்கக்கூடிய ஆய்வு நிலையங்களை நிறுவுதல் வேண்டும். நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கக்கூடிய சிந்தனைகளை சமயப் பாரம்பரியங்களிலிருந்து ஆராய்ந்து பொருத்தமான முறையில் முன்வைக்கக்கூடிய ஆய்வுகளையும் மேற்கொள்ள வேண்டியது காலத்தின் இன்றியமையாத தேவையாகும்.

10) சகல சமயத்தவர்களும் தங்களது சமய தனித்துவங்களை பேணி சுதந்திரமாக செயற்படும் நிலையை அனைத்து அரச கல்வி நிலையங்களிலும் அரச காரியாலயங்களிலும் அரச கட்சிகளிலும் ஏற்படுத்தப்பட வேண்டும். அதே வேளை பிறரை பாதிக்காது நடந்து கொள்வது அவசியம் ஆகும்.

**உசாத்துணைகள்**


1. Attacks on Places of Religious Worship in Post-War Sri Lanka, Centre for Policy Alternatives March 2013,
2. Reuters Sri Lanka wins civil war, says kills rebel leader Reuters (18 May 2009). Retrieved on 18 November 2012.
3. *Sri Lankan history and roots of conflict*, Spencer, p. 23.
4. அல்குர்ஆன்
5. அல் மகாஸீதுல் ஆம்மா லிஷ்ஷரீஆ அல் இஸ்லாமியா, கலாநிதி யூசுப் அல் ஆலிம்
6. இலங்கை அரசியலில் மொழியும் மதமும், சமாதிலிங்கம் சத்தியசீலன், அருள் வெளியீட்டகம், யாழ்பாணம், முதலாம் பதிப்பு, வெளியீட்டாண்டு 1994.
7. இனப்பிரச்சினை ஓர் இஸ்லாமிய கண்ணோட்டம், எம். ஏ. எம் மன்ஸூர், மீள்பார்வை வெளியீட்டகம், கொழும்பு, முதலாம் பதிப்பு, வெளியீட்டாண்டு 1999
8. WWW.statistics.gov.lk, Department of census and statistics Sri Lanka, 2012
9. http://pathfinderfoundation.org
10. http://www.sundayobserver.lk/2008/04/20/imp01.asp
11. Islam web.net, இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகள் மனித உரிமைக்கான அடிப்படை, கலாநிதி முஹம்மது அஸ்ஸுஹைலி.